பாடம் 4

ஜூலை 20-26

# சங்கீதம்-நீதிமொழிகளில் இரக்கமும் நியாயமும்



## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *சங் 9:7-9, 13-20; சங் 82; சங் 101; சங் 146: நீதி 10:4; 13:23, 25; 30:7-9.*

**மனன வசனம்:** ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதிசெய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள். சங் 82:3,4.

தொழுகையிலும் பக்திப்பரவசமான நேரங்களிலும் மட்டுமல்ல, எல்லாச் சூழல்களிலும் தேவனோடு வாழ்கிற அனுபவங்களை சங்கீதமும் நீதிமொழிகளும் சித்தரிக்கின்றன. ஞானமான அறிவுரைகள் பல நீதிமொழிகளில்உள்ளன. உறவுகள், குடும்பம், வியாபாரம், அரசாங்கம்பற்றித் தேவையான ஞானம் அதில்உள்ளன. சங்கீதப்புத்தகம் பாடல்களின் தொகுப்பு; பல்வேறு உணர்வுகள், ஆவிக்குரிய அனுபவங்களை உள்ளடக்கியது. புலம்பல், சந்தோஷ மிகுதி, இரண்டுக்கும் இடைபட்ட நிலைகள் என அனைத்து நிலைகளையும் உள்ளடக்கியுள்ளன. வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அனுபவத்திலும் நம் விசுவாசத்தின் தாக்கம் காணப்படவேண்டுமெனச் சொல்கின்றன. ஏனென்றால், நம் வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் தேவன் அக்கறையுள்ளவராக இருக்கிறாராம்.

ஆனால் மனிதர்கள் இன்று அநியாயங்களையும் சந்திக்கிறார்கள். அநியாயத்தைப் போக்கி, நம்மை விடுவிக்க ஆண்டவர் விரும்புகிறார். அவர்மட்டுமே நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாக இருக்கிறார்.

இந்தக் கருத்துபற்றி இந்தப் புத்தகங்களில் சொல்லப்படுவதைப் பார்ப்போம். தரித்திரருக்கும், சிறுமைப்பட்டவர்களுக்கும், மறக்கப்பட்டவர்களுக்கும் நீங்கள் உற்சாகத்தோடு ஊழியம் செய்வதற்கு அது நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும். அது நம் கடமையும் ஆகும்.

*2019, ஜுலை 27* வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

# சங்கீதம்: சிறுமைப்பட்டோருக்கு நம்பிக்கையூட்டும் பாடல்கள்

துன்பத்திலும் தவிப்பிலும் உள்ளவர்களை தேவன் பார்க்கிறார்; அவர்களுக்குச்செவிகொடுக்கிறார். தேவன்மேல்நம்பிக்கையாகஇருந்தும், தங்களுக்கு அநியாயம் நேர்ந்துவிட்டதாக புலம்புகிற நபர்களைச் சங்கீதங்களில் காணலாம். நியாயத்தையும் நன்மையையும் தேவவல்லமையையும்விட அநியாயமும் ஒடுக்குதலும் மேலோங்கிவிடும்போலத் தெரிவதாகவும், அனுபவிப்பதாகவும் பாடியிருக்கிறார்கள்.

இதே பாடல்களை இன்றும் பாடுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் வாழ்க்கையிலும் விசுவாசத்திலும் தோல்வி இருக்காது; நம்பிக்கை இருக்கும். காலதாமதத்திற்குமுன், தீமைவெல்வதற்குமுன், தீமைபெருகி ஒடுக்கப்படுகிறவர்களை மேற்கொள்வதற்குமுன் தேவன் செயல்படவேண்டும் என்கிற அவசரம் காணப்படும். இவ்வாறு வாழ்க்கையின் சோதனைகளையும் இடர்பாடுகளையும் ஒருபக்கமும், விசுவாசத்தை இன்னொரு பக்கமும் வைத்து, அவற்றை இணைத்து, சங்கீதக்காரர்கள் எழுதுகிறார்கள்.

**கேள்வி: இந்தச் சங்கீதத்தை எழுதிய தாவீது எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருந்தார்? சங் 9:7-9,13-20. மோசமான அனுபவத்தை எதிர்கொண்டிருந்த நிலையிலும் தேவன் நல்லவர் என்று அவர் சொல்வதை உணர்கிறீர்களா? பயங்கர, சோதனையான சமயங்களில் தேவன்மேலுள்ள உங்களுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டுள்ளதா?**

சங்கீதம் இதற்குச் சொல்கிற பதில் ஒன்றுதான். நம்பிக்கையோடிருங்கள்; தேவன் நல்லவர்; நியாயமான தீர்ப்பு கிடைக்கும். தீமையும் அநியாயமும் வெற்றிபெறுவது போலத் தெரியலாம்; ஆனால் பாவிகளையும் அநியாயக்காரர்களையும் தேவன் நியாயந்தீர்ப்பார். அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்; தீங்குக்கும் சிறுமைக்கும் ஆளானவர்கள் விடுவிக்கப்பட்டு, புதுப்பிக்கப்படுவார்கள்.

தேவனுடைய நியாயத்தீர்ப்புக்காக ஏங்கி, காத்திருப்பதாக சங்கீதங்கள் சொல்வதை முதலில் தான் புரிந்துகொண்டபோது, தனக்கு ஆச்சரியம் உண்டானதாக சி.எஸ். லீவிஸ் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு பற்றி அநேகர் பயப்படுவதைப் பார்த்தவர், அதுகுறித்து ஆதிகால யூதர்களின் கண்ணோட்டம் எப்படியிருந்ததென ஆராய்ந்து, எழுதுகிறார்: 'தங்கள் பக்கம் நியாயமிருந்தும், தங்கள் உடைமைகளை எல்லாம் பறிகொடுத்தவர்களின் முறையீடு இறுதியில் கேட்கப்படும். தீர்ப்புபற்றி அவர்கள் பயப்படமாட்டார்கள். தங்கள் வழக்கு விசாரணைக்கு வந்தால் தங்களுக்குத்தான் வெற்றி என்பது அவர்களுக்குத் தெரியும். தேவன் நியாயத்தீர்க்கும்போதும் அப்படியே நடக்கும்.' - சி.எஸ். லீவிஸ்.

துன்பங்களுக்கும் ஏமாற்றங்களுக்கும் மத்தியில், சிறுமைப்பட்டவர்களுக்கு நியாயமுண்டு என்று சங்கீதம் கூறுகிறது.

நியாயத்தீர்ப்பால் நமக்கு நன்மைதான், அதுகுறித்து நாம் பயப்படத்தேவையில்லை. அதற்குக் காரணம் என்ன?

# ‘தேவனே, ஏதாவது செய்யும்!’

**கேள்வி: சங்கீதம் 82 சொல்லும் செய்தி என்ன?**

சமுதாயஒழுங்கையும்சட்டங்களையும்தேவன்இஸ்ரவேலருக்குக் கொடுத்திருந்தாலும், அவர்கள் அவற்றிற்கு மாறாக பல சமயங்களில் நடந்துகொண்டார்கள். சுற்றிலுமிருந்த பிற தேசத்தார்போல அநியாய மாகவும், ஒடுக்குகிறவர்களாகவும் நடந்தார்கள். தலைவர்களும், நியாயசாஸ்திரிகளும் சுயநலக்காரர்களாகமாறி, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். நீதிமன்றங்களில் பாதுகாப்பு கிடைக் காமல் சாமானியர்களும் ஏழைகளும் அடக்குமுறைக்கு ஆளானார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைக்கான பதில்தான் சங் 82. தேவனே எல்லா ருக்கும் மேலான நீதிபதி. தலைவர்களையும் நீதிபதிகளையும் அவர் நியாயந்தீர்ப்பதாக இந்தச் சங்கீதம் காட்டுகிறது. சமுதாயத்தில் இத் தகைய பதவிகளில் இருப்பவர்கள் ‘அவருக்குக் கீழான நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.’ – *EGW, PK, p 198.* தேவனுடைய கீழ திகாரிகளாக, பிரதிநிதிகளாக அவர்கள் அந்தப் பதவியில் இருந்து, பணிசெய்கிறார்கள். தேவனுடைய நியாயம்தான் பூமியில் நியாயம் வழங்குவதற்கான மாதிரியாக இருக்கவேண்டும்; அதை வைத்துதான் நியாயம், அநியாயம், நியாயாதிபதிகளுக்குத் தீர்ப்புகிடைக்குமென தாவீது சுட்டிக்காட்டுகிறார்.

தேவன் தலையிட்டு, தேசத்தில் பெருகிவிட்ட அநியாயத்தைத் தடுத்துநிறுத்தும்படி அழைப்பதுபோல அந்தச் சங்கீதம் முடிவடைகிறது. சங் 82:8. சிறுமைக்கும் ஒடுக்குதலுக்கும் ஆளானவர்களின் சார்பாக, தாங்கள் வாழ்கிற, வேலைசெய்கிற இடங்களில் அநியாயத்தால் ஒடுக்கப் பட்டவர்களின் சார்பாக பேசுகிற பல சங்கீதங்களில் இதுவும் ஒன்று.

இப்பிரபஞ்சத்தின் மேலும், சகல ஜாதிகளின்மேலும் நீதியரசராக வும் பேரரசராகவும் இருக்கிற தேவனிடம் ஒரு வேண்டுகோள் வைக் கிறது சங்கீதம் 82. அவருக்கு மேலான நீதிமன்றமோ அதிகாரமோ கிடை யாது. இந்த உலகத்தில், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் கூக் குரல்கள் நீதிமன்றங்களில் கேட்கப்படாமலோ விசாரிக்கப்படாமலோ போகலாம்; ஆனால், உதவிக்காக நம்பிக்கையோடு செல்வதற்கான ஓர் இடமிருக்கிறது என்கிற நிச்சயத்தை இது தருகிறது.

சிலசமயங்களில் நமக்கு அநியாயம் நேர்ந்திருக்கலாம். வேறு சில சமயங்களில் நாமே அநியாயம் செய்திருக்கலாம்; அல்லது, அநி யாயத்தால் ஆதாயமடைந்திருக்கலாம். யாராக இருந்தாலும் சங்கீதம் 82 சொல்கிற கருத்தையும் ஞானத்தையும் கவனியுங்கள்.

அநியாயம் செய்கிற நீதிபதிகள்மேலும் தேவன் அக்கறைகாட்டுகிறார். அவர்களை தம் பிள்ளைகள் என்று சொல்லி, சரியான வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளுமாறு அழைக்கிறார். சங் **82:6.** எனவே, பிறரை ஒடுக்குகிறவர்களுக்கும்கூட நம்பிக்கை இருக் கிறது; ஆனால், மாறுவதற்கு அவர்கள்தாம் தீர்மானிக்கவேண்டும். சிந்தியுங்கள்.

# ஒரு ராஜாவின் வாக்குறுதி

**கேள்வி: தலைவர்களுக்காக எழுதப்பட்டது சங்கீதம் 101. நாம் தலைவர்களாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால், நமக்கு இதிலுள்ள முக்கியச் செய்தி என்ன?**

---

தலைவர்களுக்கான செய்திதான் சங்கீதம் 101. இஸ்ரவேலின் ராஜாவாக அரசாளத் துவங்கின சமயத்தில் தாவீது சங்கீதம் 101ஐ எழுதியிருக்கவேண்டும். தான் ராஜாவாகப் பதவியேற்ற சமயத்தில் செய்த பொருத்தனைகளாகவும் இவை இருக்கலாம். சவுலின் வீரனாக இருந்தார்; பிறகு, சவுலிடமிருந்த தப்பியோடினார். வழிபுரண்ட ஓர் அரசன் எவ்வாறு தன் நாட்டிற்கும் தன் குடும்பத்திற்கும் பாதிப்பை உண்டாக்க முடியுமென்பதை அவர் கண்கூடாகப் பார்த்தார். எனவே, தான் அப்படியொருதலைவனாகஇருக்கப்போவதில்லையெனத்தீர்மானித்திருந்தார்.

அரசியல் அல்லது தேசியத்தலைவர்களாக நாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், பிறரில் தாக்கத்தை ஏற்படுத்தவும் பிறரை ஊக்கப்படுத்தவும் நம் எல்லாருக்குமே வாழ்க்கையில் வாய்ப்பு கிடைக்கிறது. வேலையில், சமூகப்பணியில், குடும்பத்தில் அல்லது சபையில் அந்த வாய்ப்பு கிடைக்கலாம். 'சங்கீதம் 101இல் தாவீது செய்யும் பொருத்தனைகள் குடும்பத்தில் செல்வாக்குமிக்க பொறுப்புகளில் உள்ள அனைவரின் பொருத்தனைகளாகவும் இருக்கவேண்டும்.'

நமக்கு வாய்ப்பு கிடைக்கும்போது, நம் தலைவர்களிடம் இந்த நியதிகளை எடுத்துரைக்கவேண்டும்; கடைப்பிடித்துக்காண்பிக்க வேண்டும். செல்வாக்குள்ள நபர்கள் யாராக இருந்தாலும், தாவீதின் தலைமைத்துவ நியதிகளைக் கடைப்பிடிக்கிற வாய்ப்பு எல்லாருக்குமே உள்ளது. அப்படி நடக்கும்போது, பிறருக்கு ஆசீர்வாதமாகஇருப்போம்.

முதற்கண் தேவனுடைய இரக்கத்திற்காகவும் நியாயத்திற்காகவும் அவரைக் கனப்படுத்துகிறார் தாவீது. சங் 101:1. தலைமைத்துவத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் இதுதான் அடிப்படை. வாழ்க்கையிலும் பணியிலும் இரக்கத்தையும் நியாயத்தையும் கற்றுக்கொண்டு, செயல்படுத்த தாவீது பிரயாசப்பட்டார். பதவியிலும் அதிகாரத்திலும் இருப்பவர்களுக்கு அநியாயம், ஊழல், ஏமாற்று போன்றவை கண்ணிகளாக உள்ளன. இதுபோன்றவற்றில் சிக்காமல், தான் பாதுகாக்கப்படுவதை தாவீது விரும்பினார்.

ஆலோசகர்கள் நல்லவர்களாக இருக்கவேண்டியது முக்கியமென உணர்ந்தார்; உண்மையான ஆலோசகர்களையும், உத்தம அதிகாரிகளையும் நியமிப்பேனென்று உறுதிகூறுகிறார். தனக்குக்கீழ் பணிபுரிகிறவர்களிடம் நியாயமும் இரக்கமும் காணப்படுவதை விரும்பினார்.

---

நமக்கு ஆலோசகர்களும் அதிகாரிகளும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நியாயத்தோடும் இரக்கத்தோடும் வாழ்வதற்கும், வழிநடத்துவதற்கும் நாம் என்ன செய்யலாம்?

# கர்த்தருடன் நடத்தல்

சங்கீதப்புத்தகம் முடிகிற தருவாயில், கர்த்தரைத் துதிப்பதும் அதிகரிக்கிறது. 'கர்த்தரைத் துதியுங்கள்!' என்கிற கட்டளையை கடைசி ஐந்து சங்கீதங்களிலும் காணலாம். ஒடுக்கப்பட்டோர்மேலும் பசியோடிருப்பவர்கள்மேலும் தேவன் அக்கறைகாட்டுகிறார், எனவே அவரைத் துதியுங்களென சங்கீதம் 146 கூறுகிறது.

**கேள்வி: குறிப்பாக 5-9 வசனங்களில் சங்கீதக்காரர் வலியுறுத்துவது என்ன?**

தேவன் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தவர். சங் 146:6. அவர் நீதிபதியாகவும், கொடுக்கிறவராகவும், விடுதலைபண்ணுபவராகவும், பாதுகாப்பவராகவும் செயல்பட்டுவருகிறார். அதாவது மக்களின் தேவைகளை அறிந்து அவர் செயல்படுவதாக இச்சங்கீதம் கூறுகிறது. நம் வாழ்விலும், சமூகத்திலும், உலகத்திலும் தேவன் என்ன செய்கிறார், செய்ய நினைக்கிறார் என்பதை தெளிவாகச் சொல்லுகிறது.

எளியவருக்கு உதவும்படி தேவன் சொல்வதால், அவ்வாறு நாம் செய்யவேண்டுமென நினைக்கிறோம். ஆனால் தேவனே அதைத்தான் செய்துவருகிறார். அவரை நாம் பின்பற்றவேண்டுமென சங் 146 சொல்கிறது. தரித்திரம், ஒடுக்குதல், நோய் போன்றவற்றிற்கு எதிராக நாம் பாடுபடும்போது, நாம் தேவனுடைய உடன்வேலையாட்களாக, அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுகிறவர்களாகக் காணப்படுகிறோம். சங் 146 சொல்கிறவற்றை தேவனோடு சேர்ந்து செய்வதைவிட மேலான சிலாக்கியம் வேறு ஏதாவது இருக்கமுடியுமா?

இதில் நமக்கு நன்மைகளும் இருக்கின்றன. தேவனைத் தேடவேண்டும்; அவரோடு நெருங்கிய உறவுவைக்கவேண்டும் என்பதே கிறிஸ்தவர்களின் விருப்பம். ஆனால், தேவன் செய்கிற ஒன்றை நாமும் செய்யும்போதும் அவரைக் கண்டுகொள்கிறோமென சங் 146:7-9 வசனங்கள் சொல்கின்றன; இன்னும் பல வசனங்களும் கூறுகின்றன. சங் 146 சொல்வதுபோல தரித்திரரையும், வியாதியஸ்தரையும், ஒடுக்கப்பட்டோரையும் தூக்கிவிட தேவன் செயல்படுகிறாரென்றால், நாமும் அதையே செய்யவேண்டும். 'தரித்திரர், துன்பப்படுகிறவர்கள் மத்தியில் வாழ்ந்து, பணிசெய்ய கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார். அவர்கள்மேல் அதிகபட்ச அக்கறைகாட்டினார். இன்று தம்முடைய பிள்ளைகள்மூலமாக தரித்திரரையும் எளியவர்களையும் சந்திக்கிறார், வேதனையைப் போக்குகிறார், பாடுகளை நீக்குகிறார்.

'துன்பம்போக்கி, தேவைகளைச் சந்திப்பதைவிட தேவனுடைய அன்பையும் இரக்கத்தையும் புரிந்துகொள்ள, பரலோகப்பிதாவின் மனதுருக்கத்தையும் பரிவையும் அறிந்துகொள்ள வேறு வழி ஒன்றுமில்லை. சுவிசேஷமானது அதிக தேவையும் வறுமையும் உள்ள பகுதிகளில் அறிவிக்கப்படும்போதுதான், மிகுந்த பயன்தந்திருக்கிறது.' - *7T, p 226.*

பிறருக்குச் சேவைசெய்வதன்மூலம் தேவனோடு நெருக்கமான உறவு ஏற்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டா?

# நீதிமொழிகள்: எளியோர்மேல் இரக்கம்காட்டுதல்

அறிவுரைகளின் தொகுப்பு நீதிமொழிகள் புத்தகம். பல்வேறு தலைப்புகள், வாழ்க்கை அனுபவங்களின்கீழ் அறிவுரைகள் உள்ளன. வறுமை, ஐசுவரியம், மனநிறைவு, நியாயம், அநியாயம்பற்றிப் பேசுகிறது; அவற்றைவெவ்வேறு கோணங்களில்பேசுகிறது. நேர்மையோடு வாழ்வது எளிதல்ல. அதனால்தான், தேவனுக்கு உண்மையாக இருப்போரின் வாழ்விலும்கூட வெவ்வேறு சூழ்நிலைகளும் தெரிவுகளும் உண்டாக்குகிற தாக்கங்கள்பற்றி நீதிமொழிகள் எச்சரிக்கிறது.

**கேள்வி: ஐசுவரியம், தரித்திரம், எளியவர்களுக்கு உதவுதல்பற்றி பின்வரும் வசனங்கள் சொல்வது என்ன? நீதி 10:4; 13:23,25; 14:31; 15:15,16; 19:15,17; 30:7-9.**

---

---

---

வறியோர், ஆதரவற்றோர்மேல் தேவன் எவ்வளவு கவனமும் அக்கறையும் வைத்திருக்கிறாரென நீதிமொழிகள் சொல்கிறது. சூழ்நிலைகள், தவறான தெரிவுகள், அடக்குமுறை போன்றவற்றால் தரித்திரம் ஏற்படலாம்; காரணம் எதுவாக இருந்தாலும், அவர்களைச் சிருஷ்டித்தவரும் (நீதி 22:2), பாதுகாப்பவரும் (நீதி 22:22,23) தேவன். அவர்கள் என்னதான் தவறுகளைச் செய்திருந்தாலும், அவர்களை ஒடுக்குவதும், கொள்ளையிடுவதும் கூடாது.

ஞானமாகத் தெரிவுகள் செய்து, தேவனுக்குக் கீழ்ப்படியும்போது செழிப்பாக வாழலாமென நீதிமொழிகள் சொல்கிறது. ஆனாலும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுகிறவர்களெல்லாம் ஐசுவரியவான்களாகிவிடுவதில்லை. தேவனுக்கு உண்மையாயிருப்பது உலக ஆதாயத்தைவிட அதிக முக்கியமானது; அதிக பலன்தரக்கூடியது. ‘அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்.’ நீதி 16:8.

வியாபாரம், ஆட்சி, நீதித்துறை ஆகியவற்றிலும் நேர்மையும் நியாயமும் காணப்படவேண்டுமென்று நீதிமொழிகள் கூறுகிறது. நீதி 14:5,25; 16:11-13; 17:15; 20:23; 21:28; 28:14-16. தனிமனிதர்கள்மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமுதாயமும் அனைத்து மக்களின் நலனுக்காக, குறிப்பாகபாதுகாக்கப்படவேண்டியவர்களுக்காகச்செயல்படவேண்டுமென்று நீதிமொழிகள் கூறுகிறது. ஆட்சியில் இருப்பவர்களும் தலைவர்களும் தேவனுடைய உதவியால் மிகச்சிறப்பாகச் செயல்படவேண்டும் என்றும் (நீதி 8:15,16), எளியவர்கள்மேல் தேவனுடைய கிருபையையும் மனதுருக்கத்தையும் காட்டுகிற அவருடைய முகவர்களாக விளங்க வேண்டும் என்றும் சொல்கிறது.

இக்கட்டான நிலையில் இருப்பவர்களைப் பார்த்து யார்வேண்டுமானாலும் பரிதாபப்படலாம். அதே பரிதாப உணர்வு நம்முடைய செயல்களில் வெளிப்பட நாம் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:

'குற்றவுணர்வு, சுயகண்டணம் முதல் அதிகபட்ச விசுவாசம், தேவனோடுள்ள நெருக்கம்வரை தாவீதின் சங்கீதங்கள் பல்வேறு அனுபவங்களைப் பேசுகின்றன. பாவமானது அவமானத்தையும் ஆபத்தையும் மட்டுமே கொண்டுவரும் என்று அவனுடைய வாழ்க்கைப்பதிவு அறிவிக்கிறது. அதேசமயம், தேவனுடைய அன்பும் இரக்கமும் ஆழ்ந்த ஆழங்களையும் சென்றடையும் என்றும், விசுவாசமானது மனந்திரும்புகிற ஆத்துமாவை உயர்த்தி, தேவனுடைய குமாரர் என்னும் சுதந்தரத்தைப் பெற்றுத் தரும் என்றும் அறிவிக்கிறது. தேவவார்த்தையின் அனைத்து நிச்சயங்களிலும் சங்கீதம் தேவனுடைய உண்மைக்கும் நியாயத்திற்கும் அவருடைய கிருபையின் உடன்படிக்கைக்கும் வலிமையான சாட்சிகளில் ஒன்றாக இருக்கிறது.' — *EGW, PP, p 754.*

நீதிமொழிகளில் காணப்படும் ஞானத்தைப்பற்றி பின்வருமாறு சொல்கிறார்: 'மதச்சார்புள்ள, மதச்சார்பற்ற சமுதாயத்தினரின் நலனுக்கு அடிப்படையான நியதிகள் இவை. உடைமைகளுக்கும் வாழ்க்கைக்கும் பாதுகாப்பளிக்கும் நியதிகள் இவை. தன்னம்பிக்கையும் ஒத்துழைக்கிற மனநிலையும் இன்று சாத்தியமாவதற்கு எல்லாவற்றையும்விட தேவவார்த்தையில் உள்ள அவருடைய கற்பனைக்கே உலகம் கடன்பட்டுள்ளது. இன்னும் பார்த்தால், மனிதர்களின் இருதயங்களில் மங்கிப்போன, கிட்டத்தட்ட மறைந்தேபோன விஷயங்களிலும் அப்படித்தான்.' – *EGW, Edu, p 137.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *எந்தவிதத்தில் நீங்கள் ஒரு தலைவராக, செல்வாக்குள்ள பதவிவகிப்பவராக இருக்கிறீர்கள்? உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவ்வாறு நியாயத்தின் முகவராகத் திகழமுடியும்?*
2. *நீங்கள் வாழும் இடத்தின் சமுதாய, கலாச்சார அமைப்புகள் என்ன? அங்குள்ள எளியவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவமுடியும்?*
3. *ஒரு வலுவான சமுதாயத்தை அமைப்பதற்கு நேர்மையின் நியதிகளும், நியாயத்தின் நியதிகளும் காணப்படவேண்டியது ஏன் முக்கியமானது?*
4. *நலமான வாழ்விற்கு தேவையான ஞானம்பற்றி நீதிமொழிகள் கூறினாலும், தேவனுடைய தன்மைபற்றி அப்புத்தகம் சொல்வது என்ன?*

**பாடச்சுருக்கம்: வாழ்க்கையின் அன்றாட அனுபவங்களுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் உண்மையுள்ளவர்களாக வாழ்வது எப்படி என்று பேசும் புத்தகங்களாக சங்கீதமும் நீதிமொழிகளும் உள்ளன. சமுதாயம்குறித்த தேவநோக்கத்தையும், தரித்திரர் மற்றும் ஒடுக்கப்பட்டோர்மேல் அவர் காட்டுகிற விசேஷித்த அக்கறையையும் சொல்கிற புத்தகங்கள் அவை. புறக்கணிக்கப்படுகிற அல்லது அடக்கியாளப்படுகிற மக்களை தேவன் கவனிக்கிறார். அவர்களைப் பாதுகாக்க அவர் தலையிடுவார் என்பதைத்தான் சங்கீதங்களின் புலம்பல்களும் நீதிமொழிகளின் ஞானமும் சொல்கின்றன. தேவனுடைய தன்மை அப்படிப்பட்டதென்றால், நாமும் அவருடைய தன்மையுடையவர்களாக இருக்கவேண்டும்.**